1972 மார்ச் 7]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் உரிமம் வழங்குவதும் அதை அமல் நடத்துவது என்பதும் மத்திய அரசின் பொறுப்பாகும். நம்மைப் பொறுத்தவரையில் இப்படி நம் மாநிலத்தில் கொடுக்கப்பட்டவை காலதாமதமாக்கப்படுமானல் அதை மாநில அரசே எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசு வழி வகுக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தி வருகிறோம்.

மாமந்தூரில் கனி வளங்கள்

*** 343 வின.—திரு. ந. நாச்சியப்பன் :**
திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மாமந்தூர் என்ற இடத்தில் தாமிரம் கிடைப்பதாக ஆய்வு செய்யப்பட்டு பல ஆண்டு ஆகியும் இன்னும் வேலே துவக்கப்படாததின் காரணம் என்ன?

(இ) அவ் வேலே எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ)—இந்திய புவியியல் பிரிவு தென்னுற்காடு மாவட்டத்தில் மாமந்தூர் அருகில் தாமிரம், ஈயம், துத்தநாகம் கலந்த கனிப்பொருள் சுமார் 9 லட்சம் டன் அளவில் இருப்பதாகவும் அது பூமியில் 700 அடி வரையில் பரந்திருப்பதாகவும் கண்டுபிடித்துள்ளது. இவ்விடத்தில் கனிவளம் சிறிதளவே காணப்படுவதால், இந்திய புவியியல் பிரிவு மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய சிபாரிசு செய்தது. அதனல் தமிழ்நாடு கனிவள வளர்ச்சித் திட்டம் மேற்கொண்டு இவ்விடத்தில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இது சம்பந்தமான வேலே தொடர்ந்து நடந்து வருகிறது. இக்கனி வளத்தை பயன்படுத்துவது இவ்வாராய்ச்சி முழுவதும் முடிந்த பின் கிடைக்கும் பலனைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.